சிவானந்த மூர்த்தி
மொழி பெயர்த்த

# திருக்கு திருசிய விவேகம்

முதலியன.

பாயிரம்.

1. உலகநீள் வடிவை யொருபடத் தமைத்திங்
கூன்கணுக் கொருங்குகாட் டுதல்போ
னிலமிசைச் சிறந்த கலைமுழு துணர்ந்த
நெடும்புகழ்ச் சங்கர முனிவன்
புலமிகு மரபில் வித்தியா ரண்யப்
போதக னெடுத்தினி துரைத்த
நலமலி திருக்கு திருசிய விவேக
நற்சுகன் புகன்றவஷ்டகமும்.

2. வேதவே தாந்த விரிவெலாந் தொகுத்து
வியாதன்முன் புகன்றசூத் திரங்கள்
போதமாம் பொருட்டுப் பாஷியம் விரித்துப்
புகன்றருள் சங்கரன் குருவே
பேதமில் சிவானு பூதியை விளக்கப்
பேசிய வஷ்டக முத்தி
சாதனஞ் சோபா னம்மநீ உஷாபஞ்
சகமணி தமிழ்மொழிக் கணிவாம்.

3. இத்தகு சிந்தா மணிகள்பெற் றவருக்
கெய்தரி திலையிவைக் குரியோ

திருக்கு திருசிய விவேகம்

ருத்தமர் முன்னஞ் செய்தவப் பயனு
லொண்பொருட் பாக்கிய மடைவார்
சித்தசுத் தியினுற் சத்யசங் கற்பச்
செல்வரா மிவர்தமைச் சார்ந்து
பத்திசெய் பவருஞ் சதானந்தச் செல்வம்
படைத்தினி தளிப்பர்மற் றையர்க்கும்.

## திருக்கு திருசிய விவேகம்.

### விநாயகர்துதி.

இருக்காதி நான்மறையி னியற்பொருளை யுணராமே
மருக்கோல மலரடிகள் வழுத்தும்வழித் தொண்டனிவ
னெருக்காலே முத்திபெறற் குரியானென் றுளமன்னித்
திருக்கோடு திருசியமுந் தேற்றினுர் விநாயகரே.

### நூல்.

1. திருசிய மான சர்வஞ் செறியநாத் மாவே யாகு
மரியதோர் திருக்கே யாத்மா வவிகாரி யாத லாலே
பெரிதாத்மா நாத்மா விந்தப் பிரிவுணர் விவேகந் தானே
விரிதருங் கிரந்த கோடி விளம்பும்வே தாந்த மாக.
2. உருவமே திருச்ய மாகு முலோசனந் திருக்கா மங்ஙன்
வருமது திருச்ய மாகு மனந்திருக் கெனலாம் புந்தி

## திருக்குத் திருசிய

விருத்திக டிருச்ய மாகுஞ் சாட்சியே சத்தாய் வியாத்
திருக்கது வாகு மென்றுந் திருசிய மாகா வொன்றே.

3. செறியு நீல பீதமுடன் றிகழுந் தூல சூக்குமமுங்
குறிய நெடிய வெனப்பலவாக் கூறு முருவ பேதங்க
ளறியும் விடயத் துலோசனமொன் றாகி நிற்கு மதுபோல
நெறிசேர் மற்றைப் பொறிநான்கு நேரே யுணருந் தம்பேதம்.

4 அந்தக மந்த நன்று யறிதருந் தன்மை யாதி
வந்துறு நேத்ர தர்ம வகையுணர் மனதொன் றாகிச்
சிந்தனை புரிந்து நிற்குஞ் செறிசுரோத் திரந்து வக்கு
சந்தநா வாக்கி ராணத் தன்மையு மிங்ஙன் காணும்.

5. காமஞ்சங் கற்பஞ் சந்தே கத்தொடு சிரத்தா சிரத்தை
தாமுறு சீதோஷ் ணதி சகித்திடுந் தீரா தீர
மேமுறு நாணம் பிரஞ்ஞை யிகல்பய மின்ன வாய
வாமனத் தரும மெல்லாஞ் சித்தொன்றே வயங்கு விக்கும்.

6. உதயாத் தமன மில்விருத்தி யொடுக்க மாதி யில்சுயமே
திதமா விளங்கி யன்னியமாந் தேகேந் தியங்க டமைத்தெரிய
விதமாம் வேறு சாதனங்கள் வேண்டா மேதான் விளக்குவிக்குஞ்
சுதமாம் பிரத்ய கான்மாவின் றன்மை யீதென் றுணர்வாயே.

7. சிற்சாயா வேசந் தன்னுற் றிகழ்புந்தி விளங்கு மன்ன
துற்றிடு மிரண்டதாக வொன்றகங் கார மொன்று

குறிப்பு : பாடல் 7 – வரி 4 : பாட பேதம் – ஒலிப்பதிவில் **(In the Audio Recording)** இருமுறை பாடப்பட்டுள்ளது



## விவேகம்.

பற்றந்தக் க்ரண மென்னப் படுமிது பிராண தாது
பிராணி யெ
பெற்றிடு செந்து வெல்லாம் பிறங்குகா ரணம தாமே.

8. சிற்சாயை யகங்கா ரந்தான் சேருந்தப் தாய பிண்டப்
பெற்றியா மென்ன முன்னால் பேசுசம் மதமா மந்த
விற்பெறு மகங்கா ரத்தின் மேவுதா தான்மி யத்தாற்
பற்றுறு தேகந் தானும் பகருஞ்சே தனம தாமே.

9. சிற்சாயை தேகஞ் சாட்சி சேர்ந்தகங் கார மொன்று
யுற்றதா தான்மி யத்தா லுணர்வனுன் றேகம். பிர்ம
மிற்றெனு மைக்ய மான திசைதருஞ் சகஜ மென்றும்
பற்றிய கன்மம் பிராந்தி பகர்வித மூன்ற தாமே.

10. சம்பந்தி யுள்ள மட்டுஞ் சகஜத்தி னீக்க மில்லை
யிம்பர்செய் கன்ம நாசத் திரிதருங் கன்ம ஜந்தா
னம்பர ஞானம் பெற்று லகன்றிடும் பிராந்தி ஜன்யஞ்
செம்பொரு டானும் பிர்ம கேவலஞ் சித்தி யாமே.

11. சுழுத்தியி லகங்கா ரந்தான் றொன்றுமு தடங்கும் போது
செழித்திடு தேகங் காஷ்டா சேதன மாகி நிற்கு
மிழித்திடு மகந்தை யார்த்த மியங்குதல் சொப்ப னந்தான்
முழுத்திற மடைதல் ஜாக்ர மோகமா மவத்தை யாமே.

12. சிதாபாச சையோ கத்தாற் றிகழுந்தக் கரண விர்த்தி
யிதாகித சாக்கி ரத்தி லிசைந்தவா சனையாற் சொப்ன

## திருக்குதிருசிய

விதானங்கற் பிக்கும் போதம் விளங்கிடத் திந்தி யங்கள்
சுதானமாய் விடய பாஹ்யம் தோன்றக்கற் பிக்கு மன்றே
13. மனமகங் கரமி ரண்டாய் வருமுபா தானத் துண்டா
மினமுறு மிலிங்க தேக மிதுசடாத் மகம தாகுந்
தினமுறு மூன்ற வத்தை சேர்ந்தனு சரித்து நாளுங்
கனமுறத் தோன்றி நின்று கழிந்திட லியல்ப தாமே.
14. மாயைதா னிரண்டு சத்தி மருவும்விட் சேப மொன்று
பாயவா வரண மொன்று பகரும்விட் சேப சத்தி
யாயதோர்லிங்க தேக மாதிபிர மாண்ட மீறுய்
மேயநீ ளுலக மெல்லாம் விளங்கிடச் சிருட்டி செய்யும்.
15. சிருட்டியென் பதுதான் பிர்ம்ம சச்சிதா னந்தந் தன்னிற்
பெருத்திடு நாமரூபப் பிரபஞ்ச விலாச மேயாம்
பொருத்தமாஞ் சலதி தன்னிற் புகல்நுரை யாதி போலத்
திருத்தமாம் விவர்த்த மல்லாற் றிகழ்பேதஞ் சற்று மின்றே.
16. மற்றொரு சத்தி யுள்ள மருவதிருக் திருச்சிய பேத
முற்றபா கியத்திற் பிர்ம்ம முதித்திடுஞ் சிருட்டி பேத
மிற்றவா மிரண்டுந் தோன்று தியற்றுமா வரண மாகும்
பற்றுசகம் சார மூல மெனப்படும் பான்மைத் தாமே.
17. சாட்சி யொளிதா னருகிவுறத் தயங்கு மிலிங்கத் தனுவிறுடன்
மாட்சி யுறக்கூ டியதாக வயங்குஞ் சிற்சை யோகத்தாற்

விவேகம்.

காட்சி யான விவகாரங் கருதுஞ் சீவ ரூற்றேன்றுந்
தாட்சி யான வாவரண சத்தி வசத்தாற் சார்ந்ததுவே.
18. ஆய சீவ விவகார மாரோபத்தாற் சாட்சியின்பான்
மேய தாகத் தோன்றுமது மிகுமா வரண மொழிந்திடவே
யேய சீவன் சாட்சியிடத் திசைந்த பேத முணர்ந்தளவிற்
பாய சீவா ரோபம்போம் பரமார்த் தந்தான் விளங்கிடுமே.
19. அவ்வழி சிருட்டி பிர்ம மாமிவை பேதந் தோன்று
திவ்வகை மறைத்து நிற்கு மிசைத்தவா வரண சத்தி
யவ்வதன் வசத்தாற் பிர்மம் விகிர்தமா வயங்கி நிற்கு
மெவ்வமில் பிர்மந் தானே யிசைத்திடுஞ் சகும தாமே.
20. பிரம சிருட்டி யாவரணம் பிரிந்த போதிற் பிரமமொடு
தரங்கொள் சிருட்டி பேதமிவை தானே விளங்குஞ் சார்ந்துவருந்
திரங்கொள் விகாரஞ் சிருட்டியிடை சேர்ந்த தல்லாற் பிரமத்திற்
பரங்கொ ளாதெந் நாளுமொன்றப் பற்றற் றிருப்ப தியல்பாமே.
21. அஸ்தி பாதி பிரியமொடு மாய நாம வுருவைந்து
சொச்ச மாய முதன்மூன்றுந் துகளர் பிர்ம சொருபமதா
மெச்ச மாய மற்றிரண்டு மிலகு முலக வடிவாகு
முச்ச மூன்றுந் திருக்குண்மை யுபயந் திருச்யா ரோபமதே.
22. நாம ரூபங்க ளிரண்டெனு நவையற விடுத்தே
யோமெ னும்பர சச்சிதா னந்தமே யுணர்வாய்.

ஏம மாரித யாம்புயந் தனிற்புறத் தெனினு
தாம ருஞ்சமா தியைச்சதா புரிதரத் தகுமே.

23. பூத மைந்தின் மயமாகிப் பொலிந்த தேவர் விலங்குநர
ரேத வுடலிற் பின்னமற விலங்குஞ் சச்சி தானந்தமு
மோதுந் தன்மை யென்றுமொன்ற முரைத்த நாம ரூபங்கள்
பேத மாகி நாஞுவாய்ப் பேசு மித்யாத்தோற்றத்தராவாம்.

24. சவிகற்ப நிருவி கற்ப சமாதிக ளிரண்டா முள்ள
மவமற வியற்று கின்ற தறைந்தவிச் சவிகற் பந்தா
னவதிரு சியானு வித்த நவையில்சத் தானு வித்தந்
துவிதமா மிவற்றின் பான்மை தொடர்ந்தினி யுரைக்கின் றோம்.

25. காம மாதி சித்ததன்மங் கருதுந் திருச்ய மெனக்கண்டு
தாமங் கவற்றின் சாட்சியதாந் தனிச்சே தனமாத் தியானித்த
லைமிதற்குத் திருச்யானு வித்த நவிலுஞ் சவிகற்பச்
சேம சமாதி யெனச்சுருதி செப்பு மவித்தை தீர்தற்கே.

26. அசங்க சச்சிதா னந்தசொப் பிரகாச ஞகி
யிசைந்த வத்வய சொரூபியா யிருக்கிறே னென்னு
மசைந்தி டாதவிச் சமாதியே சத்தானு வித்த
நிசந்த ருஞ்சவி கற்பமென் றிசைப்பநீள் சுருதி.

27. துகமேர் சுவானு பூதிரசத் துதியா னந்த பூரணத்தாற்
சகமாந் திருச்யஞ் சத்தமொடுஞ் சாரா தமைந்த யோகிக்கே

குறிப்பு **:** பாடல் **30 –** முதல் வரி **:** பாட பேதம் – ஒலிப்பதிவில் **(In the Audio Recording)** இருமுறை பாடப்பட்டுள்ளது



## விவேகம்

சுகமாத் தோன்றி நிவாதலச் சுடர்போற் றிதமாய் நிற்கின்ற
விகமார் சமாதி நிர்விகற்ப மென்னுந் துரிய நிலயமதே.
28. இதயத் தேபோற் பாகியத்து மெவ்வெவ் வத்து தோன்றிடினுஞ்
சதமாஞ் சன்மாத் திரமல்லாற் சாற்று நாம ரூபங்க
டிதமாப் பிரித்து நீக்குதலே சிறந்த மற்றோர் சமாதியதா
மிதமா மிதனை யாதியதென் றிசைத்தார் முன்னா வுணர்ந்தாரே.
29. அகண்டமா யேக விரதமாஞ் சச்சி தானந்த வற்புத சொரூப
மிகையிலத் துவித பூரண மென்ன மேதகு நிரந்தர சிந்தை
தகைதரப் புரிதல் மத்திய மென்னச் சாற்றிடு சமாதியா மென்பர்
சுகமுற முன்சொல் விகற்பநிர் விகற்பத் தொடர்புள தாதலி னன்றே.
அலையில் சலதி
30. ஆத்ம போதா னந்தத்தா லமைந்த தம்பம் போலுமனந்
தோற்ற மின்றி யசைவற்ற துரிசில் சமாதி யாமுரைத்த
தேற்ற மான நிர்விகற்பச் செயல்போற் சிறந்த திவையாறு
மாத்த மாக நிரந்தரமா யமைந்து காலங் கழித்திடவே.
31. தேகாபி மான நீங்கித் திகழ்பர மார்த்த போத
வாகார முணர்ந்த போதி லசைமன தெங்கெங் கேனு
மேகாநின் றுளதங் காங்கே யிசைதரு சமாதி யாகும்
வாகார்மெய்ப் பொருளே யெங்கும் வயங்குறு கின்ற தாலே.
32. சீவன் றனே யவச்சின்னன் சிதாபா சன்சொப் பனகற்ப
ஜீவ தான்முத்தன்மை யடைந்தோ ஞகை வறிதக்கோன்

திருக்கு திருசிய

மேவு மவரின் முன்னேனே விளங்கு கடாகா யம்போல
வோவி லவச்சின் னன்றுறு முயர்ந்த பார மார்த்திகனே.
33. கற்பித மாத லாலே யவச்சேதங் கருது மித்தை
யுற்றதோ ரவச்சேத் யந்தா னுண்மையவ் வவச்சே தத்த
வற்றமில் பிரத்ய காத்மா சீவத்வ மாரோ பத்தாற்
பெற்றிடும் பரமார்த் தந்தான் பேதியாச் சுபாவ மாமே.
34. அவச்சின்ன சீவ னுக்கே யகண்டபூ ரணமாய் நின்ற
துவக்கறு பிரமத் தோடுந் தொடர்பயிக் கியத்தைச் சொல்லு
மவப்பவ நீக்குந் தத்வ மசியாதி வாக்கி யங்க
ணிவப்புறு மிதர சீவ னிரண்டிற்கு நிகழ்த்தா வன்றே.
35. பிரமத்தி னின்று மாயை பேசும்விட் சேப மென்றுந்
திரமிலா வரண மென்றுந் திகழிரு சத்தி யாக
வரமுறு மகண்டத் தன்மை மறைத்தந்த பிரமத் திற்குத்
தரமுறு சகத்தைச் சீவர் தமையுங்கற் பிக்கு மன்றே.
36. அந்தக் கரண சிதாபாச ஞய சீவன் விவகாரி
வந்த பூத பௌதிகங்கண் மருவும் வியாவ காரிகமா
முந்து சகமா மிவ்விரண்டு முனைத்த வநாதி காலமுதற்
பந்த நீங்கி மோட்சமுறு பரியந் தந்தா னின்றிடுமே.
37 சிதாபாச னிடத்தி னின்றுந் திகழ்தரு நித்ரா மோகம்
விதானவா வரண விட்சே பங்களாய் விளங்கிப் பூர்வ

மெதாசீவ சகத்தைக் காணு திலகநா தனமாத் தோன்று
நிதானமாம் பிராதி பாஸ்ய நிகழ்சீவ சகங்கற் பிக்கும்.
38. சேரும் ப்ரதீதி மாத்திரமே திகழும் சொப்பன சகசீவன்
றேரும் பிராதி பாசிகமாச் செப்ப லாகு மேதென்றற்
சாருந் துயிலி நீத்தெழுந்தோன் றனே பின்னுந் துயில்போதி
னேரு மவைகா ணுமையின னிலையி றேற்ற மாத்திரமே.
39. இந்தப் ப்ரதிபா சிகசீவ னியன்ற சகத்தைப் ப்ரதீதியதாச்
சிந்தை புரியான் வாஸ்தவமாத் தெரிந்தே யனுகுஞ் சுகதுக்கம்
முந்தும் வியாவ காரிகனே மோக மித்தை யெனக்காண்பன்—
வந்த வியாவ காரிகனும் பரமார்த் திகனல் வயங்குறுமே.
40. இந்த வியவகா ரிகசீவ னிசைந்த சகத்தை சத்தியமாச்
சிந்தை புரிந்தே யனுபவிக்குந் திகழும் பார மார்த்திகனே
முந்து மிவை யா வையுமென்று மோக மித்தையெனக்காண்பன்
வந்த குருமூர்த் தியினருளான் மாவாக் கியார்த்தம் விசாரித்தே.
41. இலங்கு பரமார்த் திகசீவ னேக ப்ரம்ம மாத்திரமே.
நலங்கொள் பார மார்த்திகமா நயந்து நோக்கி யுணர்கின்ற
கலங்கு மன்ய மானவெலாங் காணுன் காணத் தோன்றிடினும்
விலங்கு மசத்ய மாக்காண்பன் மேவுங் கானற் சலம்போல.
42 மாதுர்யந் திரவஞ் சைத்யம் வருமாதி சலத்தின் றன்மம்
போதரு தரங்கத் தாடும் பொருந்தநு கதமாய் நிற்கு

மேதுவா மதனிற் றேன்றி யிலங்குறு நுரையி னூடும்
பேதமின் றகி நிற்கும் பேசிய குணங்கள் போல.

43. சாட்சியாம் பிரத்ய காத்ம சச்சிதா னந்தச் சார்பாற்
காட்சியாம் வியாவ காரி கலந்திடுஞ் சத்தி யாதி
தாட்சியா மதனின் சார்பாற் றங்குறும் ப்ரதிபா சற்கு
மாட்சியாம் பரமார்த் தன்றூ வயங்குறுந் தான்றன் றலே.

44 தோன்றிடு நுரைக டீரச் சொற்றிடு பெருக்க முன்ன
மேன்றிடு மதனின் றன்ம மியன்றிடுந் தரங்கந் தன்னிற்
கான்றிடும் வழிக டீரக் கல்லோலஞ் சலத்தி னென்ற
வான்றமா துர்ய மாதி யமையுமுன் போல நீரில்.

45. இத்திறம் பிராதி பாஸ்ய சீவன்றன் லயமாம் போதில்
மத்திய வியாவ காரி வசத்தினின் றெழும வன்றன்
சுத்தமெய்ஞ் ஞானந் தோன்றத் தொடருமஞ் ஞான நீங்கிற்
சத்திய ஞான நந்தச் சாட்சியி னென்று மென்றும்.

ஸ்ரீவாக்கியசுதை

என்றும்

திருக்கு திருசிய விவேகம்

முற்றிற்று.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அருளிய திருக்கு திருசிய விவேகம்

## அவதாரிகை

‘ஏக-மேவாத்விதீயம்-பிரஹ்ம’ அதாவது இரண்டற்ற பிரஹ்மம் ஒன்றே யுள்ளது என்னும் அத்வைத சித்தாந்தத்தில், பிரஹ்மம் ஒன்றேயாயின் அது விளங்காது பிரபஞ்சம் தோற்றுவானேன்? எனச் சங்கை நிகழும் உத்தமாதிகாரியின் பொருட்டு, அப்பிரஹ்மமாய தன் சொரூபத்தில் அந்நியமின்றி அநாதியேயுள்ள ஆவரண விக்ஷேபரூப அவித்யை என்னும் அற்புத சக்தி, (பிரகாசத்திலும் அந்தகாரத்திலும் தோற்றாது, இருட்டின் வழி யாகத் தோற்றும் பொய்ப் பிரதிபலனப் பிரகாசத்திற் காணப்படும் படச் சாயாகாக்ஷிபோல) அவ்விருளையொத்த தன் வழியாயத் தோற்றும் நினைவு ரூபமான ஆத்மப் பிரதிபலன மித்யா விக்ஷேபப் பிரகாசத்தில் முதலி லுண்டான கர்த்திருரூப அகங்கார ஜீவன், தன்கரணரூபமனம் பூர்வ வாசனையாற் காட்டுந் திருதியச் சாயாகாட்சியை ஜாக்கிர சொப்பனாதிகளிற் சத்தியமாய்ப் பார்க்க, யதார்த்த சொரூபத்தை மறைத்துத் திருசியத் தோற்றத்திற்கு மூலகாரணமான ஆவரணம், திருசியம் தோற்றுங்காலும், அலையாதிகளுடன் கூடின சமுத்திரம்போல் ஏகமாயிருக்குந் தனக்கும் அத்தோற்றத்திற்கும் பேதந் தெரியவொட்டாதிருத்தலின், பூர்வசம்ஸ் காரத்தினால் அத் தோற்றத்திலுள்ள திருஷ்டியை நீக்கித் தன்னையே பாஹ்யாந்தர திருஷ்டிபேதமின்றி எப்போதும் நாடும் சஹஜசமாதிப் பழக்கத்தால் அவ்வாவரணம் நீங்கவே, அத்விதீயப் பிரஹ்மாத்ம சொரூபமாத்திரம் மிஞ்சிப் பிரகாசிக்கும் என ஆசாரியர் அத்வைத சித்தாந்த ரகசிய தாத்பரியத்தை விரிவின்றிச் சுருக்கமா யறிவித்த இச்சிறு கிரந்த மொன்றுமே உத்தமாதிகாரிகளான முமுக்ஷுக்கட்டுச் சாலும்.

## வெண்பா

திருக்கு திருசிய விவேகந் தெரித்த
திருக்காமச் சங்கர தேவே – திருக்கு
திருசிய மென்னுந் திருக்கறவே நெஞ்சி

லொருசிவமா யோங்கு மொளி.

நூல்

திருசியமா மிவையாவும் அனாத்மா. நிர்விகாரதிருக்கே ஆத்மா. இவ் வாத்மாநாத்ம விவேகமே கோடி கிரந்தங்களாலுங் கூறப்படுகின்றது.

நாம் பார்க்கும் இப்பிரபஞ்சவுருவம் கண்ணாற் காணப் படுவதால் திருசியம், காணுங்கண் திருக்கு; அக்கண் மனதாலறியப்படுவதால் திரிசியம், மனம் திருக்கு; விருத்திகளுடன் கூடின அம்மனம் சாக்ஷியாகிய ஆத்மா வாலறியப் படுவதால் திருசியம், ஆத்மாதிருக்கு; அது ஒன்றாலு மறியப் படாததால் திருசியமன்று. நீல பீதாதி வர்ணங்கள், ஸ்தூல சூக்ஷ்மம், நெட்டை, குட்டை முதலிய நானாரூபங்களைக் கண் ஏகமாயும்; நேத்திரத்தின் அந்த மந்த படுத்துவாதி நானா தர்மங்களையும், அங்ஙனமே சுரோத்திராதிகளின் தர்மங்களையும் மனம் ஏகமாயும்; காமம், ஸங்கல்பம், சந்தேகம், சிரத்தை, அசிரத்தை, தைரியம், அதைரியம், பயம், லஜ்ஜை, நல்ல கெட்ட புத்தி முதலிய நானா மனோதர்மங்களை ஆத்மா ஏகமாயும் இருந்தறிகின்றது. இவ்வாத்மா உதிக்காது; ஒடுங்காது; பெருக்காது; சிறுக்காது. தன் பிரகாசத்தாலேயே சுயம் பிரகாசித்து, சாதனாந்தரா பேக்ஷையின்றி யன்யத் தையும் பிரகாசிப்பிக்கின்றது.

புத்தியு (சமஷ்டிமனமும்)ம் சிற்சாயையுடன்கூடி அகங்காரம், அந்தக்கரணம் (மனம்) என இருவிதம். சிச்சாயையோடு தப்தாயப்பிண்டம்போல் ஒன்றா யிருக்கும் அகங்காரச் சேர்க்கையாலேயே தூலதேகமும் சேதனம்போற் றோற்றுகிறது. இவ்வகங்காரத்தின் தாதாத்மியம் (சேர்க்கை) சிச்சாயையோடு சஹஜமாயும், தேகத்தோடு கர்மஜமாயும் ஆத்மாவில் பிராந்திஜமாயும் இங்ஙனம் மூன்று விதம். புத்தியுபாதி யுள்ளவரை ஸஹஜத்திற்கு நாச மில்லை; ஆனால் ஞானத்தாற் பொய்யாம். பிராந்திஜமும் கர்மஜமும் முறையே, ஸ்த்ரூப ஆத்மாவில் யாதொன்றன் சம்பந்தமுமில்லை எனக் காணும் ஞானத்தாலும் பிராரப்தகர்ம க்ஷயத்தாலும் நசிக்கும். தேகம் ஜடமாயிருக்கும் சுழுப்தியில், அகங்காரம் முற்றும் லயித்திருக்கும். அது பாதி விரிந்தது சொப்பனம்; முற்றும் விரிந்தது ஜாக்கிரம். மனவிருத்திதான்

பூர்வ வாசனையால், சொப்பனத்தில் ஆந்தரப் பிரபஞ்சத்தையும், ஜாக்கிரத்தில் பாஹ்யப்பிரபஞ்சத்தையும் கற்பிக்கின்றது. இம்மன அகங்காரங்கட் குபாதான ஜடலிங்கதேகமே அவஸ்தாத்திரயத்தையும் ஜனன மரணாதி களையு மடைகிறது.

காரண தேகமான மாயை, விக்ஷேபம் ஆவரணம் என்னும் இரு சக்தி களுடனிருக்கும். அதில் விக்ஷேப சக்தியே லிங்கதேகாதி பிரஹ்மாண் டாந்தமான நாமரூபப் பிரபஞ்சமனைத்தையும் சமுத்திரத்தில் நுரையாதி களைப்போல சச்சிதானந்த வஸ்துவில் சிருஷ்டிக்கின்றது. மற்ற ஆவரண சக்தி அகத்தில் திருக்குதிருசியங்கட்கும் புறத்தில் பிரஹ்மப் பிரபஞ்சங்கட்கும் சிறிதும் பேதம் தெரியவொட்டாமல் மறைக்கின்றது. இதுவே சம்சார காரணம். ஆத்மசந்நிதியி லடுத்திருக்கும் லிங்கதேகத்தோடு கூடிய சிதா பாசனாகிய ஜீவனே வியாவகாரிகன். இந்த ஜீவத்வம் ஆரோபத்தால் சாக்ஷியிற் பிரகாசிக்கின்றது. ஆவரணம் நஷ்டமாயின் பேதம் தெரிகிறது; ஆரோபம் இல்லாமற் போகிறது. அங்ஙனமே பிரஹ்மப் பிரபஞ்சபேதம் தெரியவொட்டாது மறைத்துள்ள ஆவரணவசத்தாலேயே பிரஹ்மம் நானா ரூபமாய்ப் பிரகாசிக்கின்றது. ஆவரணம் நஷ்டமானால் அவ்விரண்டிற்கும் பேதம் தெரிகிறது; பிரபஞ்ச விகாரங்களெவையும் பிரஹ்மத்தி லிருக்கிற தில்லை.

அஸ்தி, பாதி, பிரியம், நாமம், ரூபம் என்னும் ஐந்து அம்சங்களில் சச்சிதா னந்தமான முந்தின மூன்றும் பிரஹ்மரூபம்; நாமரூபங்கள் பிரபஞ்சரூபம். சச்சிதானந்தங்கள் ஆகாசாதி பஞ்சபூதங்களிலும், தேவ, திரியக், மனுஷ்யர் களிலும் அபின்னமாயிருக்கின்றன. நாமரூபங்களோ பின்னமாயிருக்கின்றன. ஆதலால், நாமரூபங்களை யுபேக்ஷித்து ஸச்சிதானந்த தற்பரனாய், ஹிருத யத்திலோ வெளியிலோ எப்போதும் சமாதி செய்ய வேண்டும்.

ஸவிகற்பம், நிர்விகற்பம் என ஹிருதயத்திற் செய்யும் சமாதி இரண்டுவிதம். ஸவிகற்பசமாதியும் திருசியானுவித்தம், சப்தானுவித்தம் எனப் பின்னு மிருவகை. காமாதி திருசிய சித்த விருத்திகட்கு சாக்ஷியாய்த் தன்னைச் சிந்திப்பது ஆந்தர திருசியானுவித்த ஸவிகற்ப சமாதி. ‘நான் அசங்க சொப் பிரகாச ஸச்சிதானந்த அத்வைத ஸ்வரூபன்’ என்றறிவது ஆந்தர சப்தானுவித்த ஸவிகற்ப சமாதி. இவற்றாலுண்டாகும் சுவானுபவ ரசாவேசத்தால் திருசியம் சப்தம் இரண்டையும் விட்டு நிவாத ஸ்தல தீபம்போல நிச்சலமாயிருப்பது ஆந்தர நிர்விகற்ப சமாதி.

ஹிருதயத்திற் போலவே வெளியிலும் திருசிய வஸ்துக்களின் நாம ரூபங்களை யுபேக்ஷித்து ஸத்ரூபத்தைப் பார்ப்பது பாஹ்ய திருசியானுவித்த ஸவிகற்பசமாதி. அச் சச்சிதானந்த வஸ்துவையே அகண்டைகரஸபிரஹ்மம் என விடாதறிவது பாஹ்ய சப்தானுவித்த ஸவிகற்பசமாதி. இவ்விரண்ட னனுபவத்தால் நிஸ் தரங்க சமுத்திரம்போல் அகண்டமாய் நிச்சலமாயிருப்பது பாஹ்ய நிர்விகற்ப சமாதி. இந்த ஷட் சமாதிகளாலும் நிரந்தரம் காலந்தள்ள வேண்டும். இவற்றால் தேகாபிமானம் நீங்கி ஸதா பரமாத்மாவிலேயே ஸ்திதி செய்யும் மனம் எங்கெங்கு செல்லுமோ அங்கெல்லாம் சமாதியே. இந்நிரந்தர சமாதிப் பழக்கத்தால் அப்பராவரமான பரமாத்மாவை சாக்ஷாத்கரித்த மாத்திரத்தில் ஹிருதயக் கிரந்தி பேதிக்கப்படும்; சகல சம்சயங்களும் நஷ்டமாம்; கர்மங்கள் நாசமுறும்.

அவச்சின்னன், சிதாபாசன் (வியாவகாரிகன்), ஸ்வப்நகல்பிதன் என்னும் மூவிதஜீவரில் அவச்சின்னன் பாரமார்த்திகன். இவனும் கற்பிதனே; அவச்சேத்தியமான சொரூபமே வாஸ்தவம். ஆரோபத்தால் இவனில் ஜீவத்வத்தைக் கற்பிப்ப தன்றி இவன் ஸ்வபாவத்தில் பிரஹ்மமே. இந்தப் பாரமாத்திக ஜீவனுக்கே பூர்ண பிரஹ்மத்தோடு ஏகத்வம் ‘தத்வமஸி’ யாதி மகாவாக்கியங்களாற் சொல்லப்படுகிறதன்றி இதரஜீவர்க்கல்ல. பிரஹ் மத்தில் அநாதி கற்பிதமான ஆவரண விக்ஷேபாத்மிகையான மாயை, அவ் வகண்ட பிரஹ்மத்தை மறைத்து ஜகத்து ஜீவர்களைக் கற்பிக்கின்றது. புத்தியிலிருக்கும் சிதாபாசனான கற்பிதஜீவனே, கர்த்தா, போக்தா, பூத பௌதிகப் பிரபஞ்சமனைத்தும் போக்கிய ரூபம். அநாதிமுதல் மோக்ஷம் வரை வியவகாரத்திருத்தலால், இந்த ஜீவ ஜகமிரண்டும் வியாவகாரிகம். இவ்வியாவகாரிகனி லிருக்கும் ஆவரண விக்ஷேபரூப நித்திரா சக்தி இவனை மறைத்து, முன்பார்த்ததும் நூதனமுமான ஜீவஜகத்தை சொப்பனத்திற் கற்பிக்கின்றது. பிரதீதி காலமாத்திர மிருத்தலால் சொப்பனத்தினின்று முணர்ந்தவர்க்குப் பின் சொப்பனமின்மையால் பிராதிபாஸிக ஜீவஜக மிரண்டும் பிராதிபாஸிகமாம். பிராதிபாஸிக ஸ்வப்நத்தைப் பிராதிபாஸிகன் சத்தியமாயும் வியாவகாரிகன் அசத்தியமாயும், வியாவகாரிக ஜகத்தை வியாவகாரிகன் மெய்யாயும் பாரமார்த்திகன் பொய்யாயு மறிகிறான். பாரமார்த்திகனுக்குப் பிரஹ்மத்தோடுள்ள ஏகத்வம் பாரமார்த்திகமே. அவ்வேகத்வத்தை யறிந்தொன்றையும் பார்ப்பதில்லை. பார்க்கின் மித்தையே.

ஜலதர்மமான மாதுர்யம், திரவத்துவம், சைத்தியம் இவை அலையிலும் அதிலுள்ள நுரையிலு மிருப்பதுபோல ஆத்மாவின் சச்சிதானந்த தர்மங்கள் தன்னிற் கற்பித சம்பந்தத்தால் வியாவகாரிகனிலும் அவன் மூலமாய்ப் பிராதிபாஸிகனிலும் கலந்திருக்கின்றன. நுரை சைத்தியாதி அதன் தர்மங்கள் அலையிலும், அலை யதன் திரவத்துவாதி தர்மங்கள் ஜலத்திலும் லயித்து முன்போல் சமுத்திர மாத்திரமே யிருப்பதுபோல, பிராதிபாஸிகன் அவனது தர்மங்கள் வியாவகாரிகனிலும், வியாவகாரிகன் அவனது தர்மங்கள் பாரமார்த்திகனிலும் லயித்துப் பூர்வம்போல் சச்சிதானந்த பிரஹ்மமாத்திரமே பிரகாசிக்கின்றது.

திருக்கு திருசிய விவேகம் சம்பூர்ணம்

ஓம் தத் ஸத் பிரஹ்மார்ப்பணமஸ்து.